# பாடம் 20: மனித உடலேற்பு (2)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (7 வயது) | : 1 முதல் 7 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (10 வயது) | : 1 முதல் 16 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (13 வயது) | : 1 முதல் 24 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பாடத்தில், கடவுள் தமது தாழ்ச்சியில், நமக்கானத் தமது பேரன்பால் நம் நடுவே வாழ விண்ணக மாட்சியை விட்டு மனிதராக வந்தார் என்பதை நாம் கற்றோம். கடவுள் நம்மைத் தம்மோடு ஒன்றிக்கச் செய்து, தமது இறை வாழ்வில் நாம் பங்கேற்கலாம். இந்த பாடத்தில், நித்திய வாக்கானவர் ஒரு மனிதக் குழந்தையாகப் பிறந்த பொழுது சில முக்கிய நிகழ்வுகள் நடைபெற்றன என்பதைப் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**

1. லூக்கா 2:1-21ல் இயேசுவின் பிறப்பு குறித்து வாசித்து, அதை மாணவர்களுக்கு விளக்கவும்.

2. இயேசு பிறந்த காலத்தில், ரோமை பேரரசு அகுஸ்து சீசரால் ஆட்சி செய்யப்பட்டது. அது அமைதியின் காலமாக இருந்ததால், பல மக்கள் அகுஸ்து சீசரை மதிப்பளித்தனர். அகுஸ்து சீசருக்கு மக்கள் அளித்த இந்த மரியாதையை பயன்படுத்தி, இயேசுவே மெய்யான மீட்பர், உலகிற்கு அமைதியைக் கொணர்பவர் என்று லூக்கா சுட்டிக்காட்டுகிறார் (லூக் 2:11,14; 19:38). உடலேற்பில், படைப்பு முழுவதற்கும் மெய்யான ஆழ்ந்த அமைதியைக் கொணர்ந்திட கடவுள் மனிதரானார்.

உடலேற்பிலும் கூட, கடவுள் அனைத்தையும் நேர்த்தியாகத் திட்டமிட்டிருந்தார். அகுஸ்து சீசர் போன்ற அரசியல் அதிகாரம் கொண்ட ஒருவர் இருந்தாலும், மக்கள் தொகை கணக்கெடுப்பு வழியாக இயேசுவின் மூதாதையர் குறித்தப் பதிவை உறுதிசெய்ய அவரைப் பயன்படுத்த கடவுளால் முடியும். இந்தக் கணக்கெடுப்பின் காரணமாக ஏற்கெனவே இறைத் திட்டத்தில் இருந்தபடி, சரியாக அதே இடத்தில் இயேசுவின் பிறப்பு நிகழ்ந்தது. உறுதியாக, அனைத்தும் எப்போதும் கடவுளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. "அகுஸ்து தமது மக்களை மட்டுமே கணக்கிட நினைத்தாலும், அவர்கள் நடுவே தமது கடவுளையும் கணக்கிட்டார்" என்று புனித பீட் விளக்குகிறார்.

3. கடவுள் ஏற்கெனவே தாவீது அரசருடன் அவரது அரசு என்றென்றும் நிலைத்திருக்கும், மேலும் அவரது வழிமரபிலேயே மெசியா ("திருப்பொழிவு பெற்றவர்") வருவார் என்ற ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தியிருந்தார். இயேசுவின் பிறப்பு பற்றிய லூக்காவின் பத்தி, யோசேப்பை தாவீதின் வழிமரபினாகக் காட்டுகிறது, ஆனால் யோசேப்பு இயேசுவின் இயல்பான தந்தை அல்லர் என்பதால், தாவீது முதல் இயேசு வரையிலான தந்தைவழி மூதாதையர் நீட்சி துண்டிக்கப்படுவதாக தெரிகிறது. ஆயினும், மரியாவையும் அவரது குழந்தையையும் தமது வீட்டில் ஏற்றுக்கொண்டதால் அவரது மகனை யோசேப்பு தத்தெடுக்கிறார். அவ்வாறு செய்வதில், அவர் மூதாதையர் நீட்சியை மீண்டும் நிறுவி, தாவீதுடன் கடவுள் ஏற்படுத்திய உடன்படிக்கையைப் புதுப்பித்தார்.

உடலேற்பில், இயேசுவைத் தமது சொந்த மண்ணக மகனாக யோசேப்பு தத்தெடுத்தது, திருமுழுக்கு மற்றும் விசுவாசம் என்ற ஆவியாரின் கொடை வழியாக நாம் கடவுளின் பிள்ளைகளாகத் தத்தெடுக்கப் பெறுவதன் முன்நிழலாகும் (யோவான் 1:12-13, கலாத்தியர் 3:14 - 4:7, எபேசியர் 1:4-14). மரியாவைத் தமது மனைவியாகவும் இயேசுவைத் தமது மண்ணக மகனாகவும் ஆக்குவதில் கடவுளுடனான யோசேப்பின் ஒத்துழைப்பில், கடவுளின் விருப்பத்தை நிறைவேற்ற அவர் அதிக விலை கொடுக்க வேண்டியிருந்தது. அது அவரது நற்பெயரைப் பெரிதும் பாதிக்கும் ஒன்றாக இருந்தது (அதன் காரணமாகவே மத்தேயு 1:19ன்படி அவர் தொடக்கத்தில் மரியாவை மறைவாக விலக்கிவிட விரும்பினார்). அவ்வாறே, கடவுள் நம்மைத் தமது பிள்ளைகளாகத் தத்தெடுக்கிறதும் எளிதாக அல்லது குறைந்த விலையில் வந்த திட்டமன்று. உடலேற்பில் அவரது துல்லிய வருகை நமது தத்தெடுப்பைச் சாத்தியமாக்கியது.

ரோமைச் சட்டத்தில், தத்தெடுப்பு என்பது மிகத் தீவிரமான விடயம். ஒரு குழந்தை ஒரு குடும்பத்திற்குள் தத்தெடுக்கப்படும் பொழுது, அதைக் குடும்பத்தின் மெய்யான உறுப்பினராகக் கருதவும், மற்ற உயிரியல் பிள்ளைகளுக்குச் சமமான உரிமைகளை வழங்கவும் சட்டம் கோருகிறது. அவ்வாறே, உடலேற்பு நமது தத்தெடுப்பைச் சாத்தியமாக ஆக்கியுள்ளதால், நாம் உண்மையாகவே கடவுளின் மெய்யான பிள்ளைகள் ஆகிறோம், மேலும் அவரது மகன் கிறிஸ்துவுக்குரிய அதே சலுகைகளைப் பெறுகிறோம்.

4. தீவனத்தொட்டியில் இயேசுவின் பிறந்தது மனிதகுல மீட்பருக்கு எதிர்பாராத பிறப்பாக இருந்தது. உலகின் மீட்பர் மிகச் சாந்தமாகவும் வலுவற்றவராகவும் வருவார் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை: சிறு குழந்தையாகப் பிறந்து, சுற்றுத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்டார்.

அவ்விதமே, இயேசுவின் பிறப்பு குறித்து சாதாரண மக்களும் தாழ்ந்த குழுவினருமான இடையர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அவர்களின் எளிமை மற்றும் வழமையில், இச்செய்தியை பெறுவதற்கு இந்த இடையர்கள் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர் (லூக்கா 1:48,52).

உடலேற்பில் ஏழையான, நோயுற்ற, மற்றும் பாவம்நிறை உலகிற்குள் கடவுளின் மகன் வந்தார் என்பதை, இது நமக்கு நினைவூட்டுகிறது. வரவிருக்கும் காலத்தில், ஏழைகள் மற்றும் ஆன்மிக நோயுற்றோரின் கைகளில், தமது தவற்றினால் அன்றி மனிதகுலத்தின் பாவங்களுக்காக அவர் துன்புற வேண்டும். இன்னும், அவ்வாறு செய்ய அவர் தயாராக இருந்தார். ஆகவே உடலேற்பு, கடவுளின் தாழ்ச்சியை நமக்கு நினைவூட்டுகிறது. மாட்சியின் ஆண்டவராகிய கடவுளின் தாழ்ச்சியைப் புரிந்துகொள்வது நமக்கு கடினமாக இருக்கிறது. அவர் நமக்காகத் தாழ்ச்சி கொண்டவரானார், அதனால் அவர் தமது சொந்த மாட்சிக்கு நம்மை ஈர்க்க அவரால் இயலும்.

இயேசுவின் பிறப்பு குறித்த தமது மறையுரைகளில் ஒன்றில், இடைக்கால இறையியலாளர் புனித பொனவெந்தூர் உடலேற்பை இவ்வாறு விவரிக்கிறார்: ‘‘நித்திய கடவுள் தாழ்ச்சியுடன் கீழே வளைந்து, தூசியான நமது இயல்பை உயர்த்தித் தமது சொந்த ஆள்நிலைக்குள் ஒன்றிக்கச் செய்தார்’’. புனித அத்தனாசியுஸ் கூறுகிறார், ‘‘கடவுள் மனிதரானதால் மனிதன் கடவுளாகலாம்’’.

5. இடையர்களுக்கான வானதூதரின் அறிவிப்பில், ஒரு மீட்பர் பிறந்துள்ளார் என்று அவர் கூறினார். ‘‘மீட்பர்’’ என்றப் பட்டத்தைப் பயன்படுத்தும் ஒரே ஒத்தமை நற்செய்தியாளர் லூக்கா மட்டுமே (லூக் 1:69; 2:11; 19:9; திப 4:12; 5:31; 13:23). அந்நாட்களில், முழு உலகிற்கும் ‘‘மீட்பை’’ கொணரும் ‘‘மீட்பர்’’ என்பது ரோமை பேரரசரான சீசரின் அரசியல் பரப்புரையாக இருந்தது. ஆனால் தற்போது, மெசியாவான (‘‘திருப்பொழிவு பெற்றவர்’’) இயேசுவே எல்லா மனிதர்களுக்கும் மீட்பைக் கொணர்கிறார் என்று வானதூதர் அறிவித்ததாக லூக்கா கூறுகிறார் (லூக் 2:29-32). அவர் மனிதகுலத்தைப் பாவத்தில் இருந்து மீட்டு, கடவுளிடமான நமது ஒதுக்கத்தில் இருந்து நம்மை விடுவிக்கிறார்.

6. இயேசுவை வானதூதர் ‘‘ஆண்டவராகிய கிறிஸ்து’’ என்றும் அழைக்கிறார். ‘‘கிறிஸ்து’’ என்பதும் (கிரேக்கத்தில், கிறிஸ்தோஸ்) மெசியா (எபிரேயத்தில், மசியாக்) என்பதும் ஒன்றே, அவற்றின் பொருள் ‘‘திருப்பொழிவு பெற்றவர்’’. பெரும்பாலான யூதர்கள் இந்த கிறிஸ்து அல்லது மெசியாவை கடவுள் அனுப்புவதற்காகக் காத்திருந்தனர், அவர் தாவீது அரசரின் வழிமரபினராக இருக்க வேண்டும் என்பதால், அவர் அரசக் குடும்பத் தலைவராக இருப்பார், இந்த நாடுகடத்தலின் காலத்துக்குப் பிறகு அவர் இஸ்ரயேலின் அரசை மீண்டும் அமைப்பார் என்று எண்ணினர் (திருத்தூதர் பணிகள் 1:6).

பழைய ஏற்பாட்டில் கடவுளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த ‘‘ஆண்டவர்’’ என்றப் பட்டம், லூக்கா மற்றும் திருத்தூதர் பணிகளில் இயேசுவுக்கு அடிக்கடி பயன்படுத்தப்படும் பட்டமாக உள்ளது.

ஆகவே, ‘‘ஆண்டவராகிய கிறிஸ்து’’ என்றப் பட்டம் உலகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் பெரிய அரசராக மீட்பர் இருப்பார் என்பதைச் சுட்டுகிறது. உலகின் மீட்பர் சாந்தமுள்ளவராக, வலுவற்றவராக வருவார் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. கடவுளின் மக்களின் மீட்பர் ஒரு சிறு குழந்தையாகப் பிறந்து, சுற்றுத் துணிகளில் பொதியப்பட்டு தீவனத் தொட்டியில் கிடத்தப்படும் காட்சி யாரும் எதிர்பாராதது. ஒரு ‘‘திருப்பொழிவு பெற்றவர்’’ குறைந்த அளவில் மதித்துப் போற்றக்கூடிய உயர் மேன்மையிலாவது வந்திருக்க வேண்டும். இங்கு இவர் பொது

மக்களின் நடுவே பிறக்கிறார், அவர் பிறந்த இடத்தை இடையர்களின் குழுவைத் தவிர வேறு எவரும் அணுகவில்லை.

7. இவ்விதமான இயேசுவின் பிறப்பு கடவுளின் மேன்மை ஆடம்பரத்தைக் காட்டுவதில் இல்லை என்பதை நமக்கு கற்பிக்கிறது. செல்வம் மற்றும் ஆதிக்கத்தின் வழியாக கடவுள் தமது ஆற்றலைக் காட்டவில்லை. மாறாக, தாழ்ச்சி மற்றும் தியாகம் கொண்ட தாழ்ந்தப் பிறப்பின் வழியாக அவர் தமது மேன்மையை வெளிக்காட்டுகிறார்.

8. மத்தேயு 2:1-23ஐ வாசித்து, அதை மாணவர்களுக்கு விளக்கவும்.

9. புதிதாகப் பிறந்த குழந்தை இயேசுவை வணங்க கிழக்கில் இருந்து வந்த ஞானியர் குறித்து மத்தேயு நற்செய்தி கூறுகிறது. இந்த ஞானியர் பெர்சியாவில் குருத்துவக் குழுமத்தில் இருந்து வந்தவர்களாக இருக்க வேண்டும், தங்களின் சமய நடைமுறைகளின் ஒரு பகுதியாக அவர்கள் விண்மீன்களின் வடிவாக்கத்திற்கு (இன்றைய சோதிடர்களைப் போன்று) விளக்கம் கொடுத்தனர். வெளிப்படையாக, இஸ்ரயேலரின் கடவுளை அறியாத பிறவினத்தாராக அவர்கள் இருந்தனர். அவர்கள் தொலைவில் இருந்து கண்ட, யூதர்களது அரசரின் பிறப்பைக் குறிக்கும் இந்த விண்மீன் குறித்து விசாரிக்க எருசலேம் வந்தனர். இது ஏரோதை மிகவும் கலக்கமுறச் செய்தது.

10. இயேசு பிறந்த பொழுது, ஏரோது அரசனுக்கு ஏறத்தாழ 70 வயது மேலும் அவன் யூதேயா மீது 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி செய்து வந்தான். அவன் செல்வத்துடனும் வலியவனாகவும் இருந்தான், ஆனால் நம்பவே முடியாத அளவுக்கு பாதுகாப்பற்றவனாகவும் மடையனாகவும் இருந்தான். ரோமை பேரரசைச் சார்ந்த யூதேயாவின் அரசனாக (அரசியல், பொருளாதாரம், மற்றும் ராணுவ ஆதரவு அனைத்திற்கும் ரோமை பேரரசைச் சார்ந்திருக்கும் நிலையில்) இருந்ததால், தனக்கு எவ்வளவு அதிகாரம் இருக்கிறது என்பது குறித்து மிகுந்த அச்சத்தில் இருந்தான். அவன் உண்மையில் உரிமையுள்ள அரசனாக இல்லை, ஏனெனில் அவன் தாவீது அரசரின் வழிமரபில் வரவில்லை. பிறப்பு அடிப்படையில் அவன் உரிமையுள்ள அரசனாக இல்லாததால், அவனது அரசுரிமை எப்பொழுதும் ரோமை சீசர் அல்லது யூத மக்களின் அச்சுறுத்தலின் கீழ் இருந்தது.

11. ஞானியர் ஏரோதைச் சந்தித்தப் பிறகு, அவர்கள் விண்மீனைப் பின்தொடர்ந்து எருசலேமில் இருந்து பெத்லகேமுக்குச் சென்று குழந்தை இயேசு இருந்த இடத்தைக் கண்டடைந்தனர். அவர்கள் அவரை வணங்கி, அவருக்கு பொன், சாம்பிராணி, மற்றும் வெள்ளைப்போளம் ஆகிய காணிக்கைகளை வழங்கினர். முற்கால உலகில் ஓர் அரசர் அல்லது தெய்வத்திற்கு மரியாதை செலுத்த மக்கள் வழங்கும் வழக்கமான காணிக்கைகள் இவை. ஆனால் ஆன்மிகக் கண்ணோட்டத்தில், இந்தக் காணிக்கைகள் இயேசுவைக் குறித்த சில முக்கிய விடயங்களை அடையாளப்படுத்துகின்றன. பொன் அவரது அரசத்துவத்தைக் காட்டுகிறது, சாம்பிராணி கடவுளின் மக்கள் சார்பாக அவரது குருத்துவ நிலையை அடையாளப்படுத்துகிறது, மேலும் வெள்ளைப்போளம் அவரது இறப்பை முன்குறிக்கிறது ஏனெனில் அது வழக்கமாக இறந்தோர் உடலைப் பதனிடப் பயன்படுத்தப்பட்டது.

12. ஞானியர் விண்மீனைப் பார்த்தது மற்றும் அவர்கள் குழந்தை இயேசுவைச் சந்திக்க வந்தது ஆகியவை பழைய ஏற்பாட்டின் இறைவாக்குகள் நிறைவேறச் செய்தன.

*எண்ணிக்கை 24:17:* “நான் அவரைக் காண்கிறேன், ஆனால் இப்போது அன்று. நான் அவரைப் பார்ப்பேன், ஆனால் அண்மையில் அன்று: யாக்கோபில் இருந்து ஒரு விண்மீன் வெளிப்படும்.”

*திருப்பாடல் 72:10-11:* “தர்சீசு மற்றும் தீவுகளின் அரசர்கள் காணிக்கைகளைக் கொண்டு வருவார்கள்; சேபாவிலும் செபாவிலுமுள்ள அரசர்கள் நன்கொடைகளை வழங்குவார்கள்; எல்லா அரசர்களும் அவர்முன் வீழ்ந்து வணங்குவார்கள், எல்லா தேசத்தாரும் அவருக்கு ஊழியம் செய்வார்கள்.”

*எசாயா 60:6:* “ஒட்டகங்களின் பெருந்திரள் உன்னை நிரப்பும்; மிதியான் மற்றும் ஏப்பாகின் இளம் ஒட்டகங்களும் வந்து சேரும்; சேபாவில் உள்ள அனைவரும் பொன்னும் சாம்பிராணியும் கொணர்ந்து, யாவேயின் (ஆண்டவரின்) புகழை எடுத்துரைப்பர்.”

13. ஞானியர் பெத்லகேமில் இருந்து புறப்பட்ட உடனே, புதிதாகப் பிறந்த தங்கள் குழந்தை சந்திக்கப்பட்டதையும் வணங்கப்பட்டதையும் கண்ட யோசேப்பு மற்றும் மரியாவின் மகிழ்ச்சி, திடீரென்று திகிலாக மாறியது. தம்மைப் போல் சட்டத்திற்குப் புறம்பாக அன்றி, அரசராகவே பிறந்த இக்குழந்தையின் பொருட்டு கலக்கமுற்ற ஏரோது, மறைநூலில் பதிவு செய்யப்பட்டுள்ள கொடூரக் குற்றங்களில் ஒன்றைச் செய்தான். அவன் தனது அரண்மனையில் இருந்து மூன்று மைலில் இருந்த பெத்லகேமிற்குள் கொலைகாரர்களை அனுப்பி, இரண்டு வயதிற்கு உட்பட்ட எல்லா ஆண் குழந்தைகளையும் கொன்றான். இந்த மாசற்றோரின் படுகொலையை மத்தேயு நற்செய்தி மட்டுமே பதிவு செய்திருந்தாலும், ஏரோதின் செயல்கள் எவ்வளவு இரக்கமற்றவை என்பதை வரலாறு பதிவு செய்கிறது. ஏரோது ஒரு குழந்தையைப் படுகொலை செய்யவே குறி வைத்தாலும், மேலும் பல குழந்தைகளும் இறந்தன.

14. ஏரோதின் கொலை முயற்சியில் இருந்து தப்பிக்க குழந்தை இயேசுவையும் மரியாவையும் அழைத்துக்கொண்டு எகிப்துக்குத் தப்பிச் செல்லுமாறு யோசேப்பு கனவில் எச்சரிக்கப்பட்டார். பல நூறு மைல்கள் தொலைவிலுள்ள எகிப்திற்கு செல்லும் நீண்ட கடினமானப் பயணத்திற்கு பத்து முதல் பதினான்கு நாட்கள் ஆகும். மரபின்படி -- உண்மையாகவும் இருக்கலாம் -- மரியா குழந்தையைக் கையில் ஏந்தியவராய் கழுதையின் மீது அமர்ந்திருக்க யோசேப்பு அதன் கயிற்றைப் பிடித்து நடத்திச் சென்றார். அவர்கள் தண்ணீர் பற்றாமலும் வழிப்பறி கொள்ளையராலும் துன்பத்திற்குள்ளாகும் ஆபத்து இருந்தது.

அவர்கள் எகிப்தில் வாழ்ந்த காலத்தில் தங்கள் சொந்த நாட்டை விட்டு வந்த கடினத்தோடு, ஆபத்தில் இருந்து தப்பிய இயேசு வளர்வதைக் கண்ட மகிழ்ச்சியும் கலந்திருந்தது. அவர்கள் விலங்கு முகங்களைக் கொண்ட எகிப்திய தெய்வங்களின் பல சிலைகளை தங்களைச் சுற்றி கண்டிருக்க சாத்தியமுண்டு. மேலும் தமது மகன் இயேசு இந்த மக்களையும் மீட்கவே இந்த உலகிற்கு வந்துள்ளார் என்பதை மரியா உண்மையாக அறிந்திருந்தார்.

ஏரோதின் இறப்புக்குப் பிறகு (குறைந்தது ஒரு வருடம் கழித்து), யோசேப்பு, மீண்டும் ஒருமுறை கனவுக்குக் கீழ்ப்படிந்து, இறைவாக்கு நிறைவேறுமாறு கலிலேயாவின் நாசரேத்து சென்று குடியமர்ந்தார். ஆகவே, இயேசு தமது குழந்தை மற்றும் விடலைப் பருவங்களை நாசரேத்தில் செலவிட்டார்.

15. எகிப்தில் இருந்து திரும்பியதும் நாசரேத்தில் குடியமர்ந்து உண்மையாக மிக இயல்பான முடிவாகும், ஏனெனில் மரியா நாசரேத்தைச் சேர்ந்தவராக இருந்தார், யோசேப்பும் இளம் வயதில், அல்லது தமது வேலையின் காரணமாகச் சற்றுப்பின்பு, அல்லது மரியாவோடு மண ஒப்பந்தம் நிகழ்ந்தப் பிறகு பெத்லகேமில் இருந்து நாசரேத்து சென்றிருக்கச் சாத்தியமுள்ளது. அதே நேரத்தில், மெசியா ‘‘நசரேன்’’ என்று அழைக்கப்பட வேண்டும் என்ற இறைவாக்கை இந்த முடிவு நிறைவேற்றியதாக மத்தேயு நற்செய்தி நமக்கு கூறுகிறது.

மத்தேயு 2:23: ‘‘அவர் நாசரேத்து எனப்படும் ஊருக்குச் சென்று அங்கே குடியமர்ந்தார். இவ்வாறு ‘‘நசரேயன்’’ என அழைக்கப்படுவார் என்று இறைவாக்கினர்கள் உரைத்தது நிறைவேறியது.’’

ஆயினும், எந்தப் பழைய ஏற்பாட்டு பத்தியும் இந்த இறைவாக்கை நேரடியாகச் சுட்டிக் காட்டவில்லை. பின்னர் மத்தேயு 2:23 எப்படி விளக்கப்பட வேண்டும்?

அ) இயேசுவின் காலத்தில், இஸ்ரயேலின் வடபகுதியில் (கலிலேயா) 400 முதல் 500 பேர் மட்டுமே வசித்த சிறிய கிராமமாக நாசரேத்து இருந்தது. அது தாழ்ந்ததாக, பட்டிக்காடாக அறியப்பட்டது. ஆகவே, அந்த கிராமத்தில் வசித்தோர் பெரிய சாதனைகளைப் படைக்கத் திறனுள்ளவர்களாகப் பார்க்கப்படவில்லை. அதனோடு, வடபகுதியில் ரோமையரின் படையை நிறுத்தும் இடமாகவும் நாசரேத்து இருந்தது. ஆகவே, அது யூதர்களால் மிக வெறுக்கப்பட்ட இடமாக இருந்தது. இயேசு நாசரேத்தில் வாழ்ந்தார் என்பது அவரது தாழ்நிலை மற்றும் தாழ்ச்சியைக் காட்டுகிறது, மேலும் மத்தேயு 2:23 இதையே சுட்டுகிறது. இந்த வசனம் பழைய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்ட இறைவாக்கின் நேரடி மேற்கோளாக இல்லை என்றாலும், வரவிருக்கும் மெசியாவின் தாழ்நிலையைக் குறித்த இறைவாக்கு பத்திகள் பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்றன.

ஆ) இஸ்ரயேலில் வேறு பல இடங்களைப் போலன்றி இயேசுவின் காலத்தில், யூதர்கள் மற்றும் பிறவினத்து மக்கள் கலந்து வாழ்ந்ததற்காக நாசரேத்து அறியப்பட்டதாக இருந்தது.

இதன் காரணமாக, பல யூதர்கள் நாசரேத்தை இழிவாகக் கருதினர். ஆயினும், யூதர்கள் மற்றும் பிறவினத்தார் நடுவே வளர்ந்தது, யூதர்களுக்கு மட்டுமின்றி எல்லா இனத்தாருக்குமான இயேசுவின் எய்துபணியை நிறைவேற்ற வாய்ப்பாக அமைந்தது (மத் 28:18-20). ஆகவே, இயேசு நாசரேத்தில் வளர்ந்ததும் கடவுள் யூதரல்லாதோரையும் மீட்பார் என்ற பழைய ஏற்பாட்டு இறைவாக்கின் நிறைவேறுதலாக இருந்தது (எசா 56:1-8). இந்த விதத்தில், இயேசு ஒரு ''நசரேயனாக'' இருந்தார்.

இ) எசாயா 11:1ல், ''ஈசாய் என்னும் அடிமரத்தில் இருந்து தளிர் ஒன்று துளிர்விடும், அதன் வேர்களில் இருந்து கிளை ஒன்று வளர்ந்து கனிதரும்'' என்ற இறைவாக்கு உள்ளது. இந்தக் கிளை துல்லியமாக, ஈசாயின் மகனான தாவீது அரசரின் வழிமரபான இயேசுவைச் சுட்டுகிறது. ''கிளை'' என்பதன் எபிரேய வார்த்தை 'நெட்செர்'. எரேமியா போன்ற இறைவாக்கினர்கள் கிளை (நெட்செர்) என்ற இந்த உருவமைவை எதிர்பார்க்கப்பட்ட அரச மெசியாவைப் பற்றிப் பேசும்போது பயன்படுத்தியுள்ளனர் (எரே 23:5, 33:14-16). ஆகவே, இஸ்ரயேல் காத்திருந்த ''நசரேயனாக'' (நெட்செர்-யேன்) இயேசு இருந்தார்.

16. யோசேப்பும் அவரது குடும்பமும் நாசரேத்தில் குடியமர மற்றொரு காரணம் அவரது தொழில். விவிலிய மொழிபெயர்ப்புகள் யோசேப்பு ஒரு தச்சராக (இயேசு செய்த வேலை) இருந்தார் என்று பதிவு செய்தாலும், மறைநூலின் மூல மொழியில் யோசேப்பு ஒரு டெக்டோன் (''கல்தச்சர்'' அல்லது ''கட்டடத் தொழிலாளர்'') என மத்தேயு 13:55 கூறுகிறது. இஸ்ரயேலில் பெரும்பாலான வீடுகள் (இன்றும் கூட) கற்களால் கட்டப்பட்டுள்ளன.

ஏரோது அந்திப்பாவால் விரைவான வளர்ச்சியுற்ற செப்போரிஸ் (அல்லது சிப்போரி) என்ற முற்கால ஊரில் இருந்து மூன்றே மைல்கள் தொலைவில் நாசரேத்து இருந்தது. ஏரோதின் அழகுபடுத்தும் திட்டம் நடந்ததால் செப்போரிஸை ''கலிலேயாவின் அணிகலன்'' என்று யூத வரலாற்றாளரான யோசேப்புஸ் விவரிக்கிறார். இந்தத் திட்டம் ஒரு கல்தச்சரான யோசேப்புக்கு பெரும் வேலை வாய்ப்பை வழங்கியது. யோசேப்புக்கு ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் நடந்து செப்போரிஸ் செல்வது சாத்தியம், மாலை வேளைகளில் நடந்தே வீடு திரும்பலாம். யோசேப்போடு இளைஞர் இயேசுவும், தமது மண்ணகத் தந்தையின் தொழிலைக் கற்றார்.

இதன் காரணமாக, இயேசு பல கட்டட உவமைகளைத் தமது போதனையில் பயன்படுத்தினார் என்பதை நாம் காண்கிறோம்:

*மத்தேயு 7:24-27:* ''ஆகவே, நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் பாறை மீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார். மழை பெய்தது, வெள்ளம் பெருக்கெடுத்தது, பெருங்காற்று வீசியது, அவை அவ்வீட்டின் மேல் மோதியும் அது விழவில்லை; ஏனெனில் பாறையின் மீது அதன் அடித்தளம் இடப்பட்டிருந்தது. நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படாத எவரும் மணல் மீது தம் வீட்டைக் கட்டிய அறிவிலிக்கு ஒப்பாவார். மழை பெய்தது, வெள்ளம் பெருக்கெடுத்தது, பெருங்காற்று வீசியது, அவை அவ்வீட்டைத் தாக்க அது விழுந்தது; இவ்வாறு பேரழிவு நேர்ந்தது.''

*லூக்கா 14:28-30:* ''உங்களுள் யாராவது ஒருவர் கோபுரம் கட்ட விரும்பினால், முதலில் உட்கார்ந்து, அதைக் கட்டிமுடிக்க ஆகும் செலவைக் கணித்து, அதற்கான பொருள் வசதி தம்மிடம் இருக்கிறதா எனப் பார்க்கமாட்டாரா? இல்லாவிட்டால் அதற்கு அடித்தளமிட்ட பிறகு அவர் கட்டிமுடிக்க இயலாமல் இருப்பதைப் பார்க்கும் யாவரும் ஏளனமாக, 'இம்மனிதன் கட்டத் தொடங்கினான்; ஆனால் முடிக்க இயலவில்லை' என்பார்களே!''

17. லூக்கா 2:41-52ஐ வாசித்து, அதை மாணவர்களுக்கு விளக்கவும்.

18. விவிலிய யூத சமயத்தில், மூன்று திருப்பயண விழாக்கள் இருந்தன, இந்த விழாக்களின் பொழுது கோயில் சடங்குகளைக் கடைபிடிக்க யூதர்கள் எருசலேம் கோயிலுக்குச் சென்றனர். ஒன்று இலையுதிர் காலத்திலும், இரண்டு வசந்த காலத்திலும் நடைபெற்றன. அறியப்பட்ட உலகம் முழுவதில் இருந்தும் திருப்பயணிகளைக் கொணர்ந்த மிகப்பெரிய விடுமுறையாக பாஸ்கா விழாவுக்கான விடுமுறை இருந்தது.

எகிப்தில் இருந்து வெளியேறிய நேரத்தில், இஸ்ரயேல் மக்கள் பாஸ்காவைத் தங்கள் இல்லங்களில் கடைபிடித்தனர். சாலமோன் எருசலேமில் கோயில் கட்டியதும், எருசலேம் பாஸ்காவின் மைய இடமானது. குடும்பத்தில் கடைபிடிப்பதற்கு பதிலாக, பாஸ்கா ஒரு திருப்பயண விழாவாக மாறியது. இயேசுவின் பொது திருப்பணி காலத்தில், அனைத்து இடங்களில் இருந்த யூத மக்களும் பாஸ்கா மற்றும் புளிப்பற்ற அப்ப வாரத்தைக் கொண்டாட எருசலேமுக்கு வந்தனர். அதன் விளைவாக, ஒவ்வோர் ஆண்டு கொண்டாட்டத்திற்கும் திரளான மக்கள் எருசலேமிற்குள் குவிந்தனர். ஒவ்வோர் ஆண்டும் பாஸ்காவுக்கு 200,000 இஸ்ரயேலர் புனித நகருக்குத் திருப்பயணம் செய்ததாக பல வரலாற்றாளர்கள் ஊகித்துள்ளனர். எனினும், முற்கால வரலாற்றாளர் ஒருவர் இந்த விழாவுக்காக 2.7 மில்லியன் (27 லட்சம்) யூத மக்கள் எருசலேமுக்கு வந்ததாகக் கணக்கிட்டுள்ளார். ஒருவர் பாஸ்கா கடைபிடிப்பதற்கான வீடு அல்லது அறையைக் கண்டுபிடிப்பதில் உள்ள கடினத்தைக் கற்பனை செய்யுங்கள். பெரிய குடும்பங்கள் கிடைத்த ஒவ்வொரு சிறு இடத்தையும் உணவுக் கூடலுக்காகப் பயன்படுத்தினர்.

19. பாஸ்கா சடங்கு எருசலேம் கோயிலில் நடைபெறும். கோயிலில் விலங்குகள் பலியாகச் செலுத்தப்பட்டன. அங்கு லேவியர்களால் திருப்பாடல்கள் பாடப்பட்டன, முன்குறிக்கப்பட்டச் சடங்குகளை குருக்கள் நிறைவேற்றினர். அத்தகைய ஒரு பரபரப்பான நாளில், யோசேப்பும் மரியாவும் இயேசுவைத் தவறவிடுவது மிக எளிதானது. ஒரு சிறிய குடும்பமாக இருந்த அவர்கள், தங்களோடு இணைந்து பாஸ்கா ஆட்டுக்குட்டியைப் பகிரும் மற்றக் குடும்பங்களோடு (உறவினர்கள்) பயணம் செய்திருக்க வேண்டும். இயேசு தமது உறவினர்களின் மற்றக் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருப்பார் என யோசேப்பும் மரியாவும் நினைத்திருக்க வேண்டும். எருசலேமுக்கு வந்த பெருந்திரளான மக்கள் கூட்டத்தில் தொலைந்த இயேசுவின் காலடித் தடங்களைக் கண்டறிய வேண்டும் என்று உணர்ந்தபோது அவர்களை எத்தகைய அச்சம் ஆட்கொண்டிருக்கும் என கற்பனை செய்யுங்கள். நூறாயிரக் கணக்கான மக்களின் கூட்டத்தில் தமது அன்பு மகனை இழந்த அச்சத்தால் மரியா தேம்பி அழுதிருப்பார்.

20. இயேசு கோயிலில் இருந்த மக்களில் பேசிக் கொண்டிருந்தது குறித்து எப்போதாவது நீங்கள் வியந்திருக்கிறீர்களா? பாஸ்கா விழா முடிந்து விட்டதால், அவர் அங்கு பேசிக் கொண்டிருந்தாரா? பாஸ்கா நேரத்திலே என்பது ஒரு நுண்ணறிவாளரின் கணிப்பு. இங்குள்ள முரண், இந்தச் சிறுவன் வரவிருக்கின்ற 20 ஆண்டுகளில் தம்மையே பாஸ்கா பலியாகக் கொடுக்க விதிக்கப்பட்டுள்ளார்! அவர் வரவிருக்கும் விடயங்கள் குறித்து இறைவாக்காக மக்களிடம் கூறியிருக்க வேண்டும். அவர் புரிந்து வைத்திருந்தவை பற்றி அவர்கள் மிகவும் வியந்திருக்க வேண்டும். அனேகமாக வேறெவரும் முன்பு கேட்டிராத அளவுக்கு பாஸ்கா பற்றி ஆழமாக விளக்கம் அளித்தார்.

21. மூன்று நாட்கள் தேடலுக்குப் பிறகு, இயேசுவைக் கோயிலில் கண்டதால் மரியா மகிழ்ச்சி கொண்டார். அவர் குடும்பத்தில் இருந்து தம்மைப் பிரித்துக் கொண்டது குறித்து அவரது தாய் கேட்டபோது, “ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் எனது தந்தையின் இல்லத்தில் இருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?” என்று பதிலளித்தார். இவையே உடலேற்ற வாக்கானவரின் வாயில் இருந்து வந்த முதல் வார்த்தைகளாக நற்செய்தியில் பதிவுசெய்யப் பெற்றுள்ளன. இந்த வார்த்தைகளில், இயேசு தமது ஆள்நிலை முழுவதையும், தமது வாழ்வு முழுவதையும், தமது எய்துபணி முழுவதையும் சுருக்கமாகத் தருகிறார். அவை அவரது இறை மகன்மையை வெளிப்படுத்துகின்றன; அவை அவரது இயல்புமீறிய எய்துபணிக்குச் சான்று பகர்கின்றன. இயேசு கூறியதன் பொருள் அவரது மண்ணகப் பெற்றோருக்கு புரியவில்லை என்றாலும் (லூக் 2:50), அவர் தமது இறைத்தன்மை மற்றும் தமது தந்தை தம்மிடம் வேண்டுவது குறித்து முழுமையாக அறிந்திருந்தார் என்பதையும் இந்த வார்த்தைகள் வெளிப்படுத்துகின்றன.

22. நாசரேத்தில் தமது பெற்றோரின் அதிகாரத்தின் கீழ் இயேசு வாழ்ந்தார் (லூக் 2:51) என்பதைத் தவிர, அவர் வளர்ந்த நாட்கள் குறித்து வேறெதுவும் வெளிப்படுத்தப்படவில்லை. தமது பெற்றோருக்கு கீழ்ப்படிந்த எடுத்துக்காட்டின் வழியாக கடவுளின் மகன் தாழ்ச்சியைக் கற்பிக்கிறார். உடலேற்பானது தாழ்ச்சி என்ற பெருஞ்செயலைச் சாத்தியமாக்கியது. அதன் வழியாக நித்திய, எல்லாம்வல்ல, முடிவற்ற, கடவுளின் மகன் தாமே மனமுவந்து மனித இயல்பை எடுத்துக் கொண்டார். படைப்பாளரான அவர், படைக்கப்பட்டோரின் அதிகாரத்திற்குத் தம்மை கீழ்ப்படுத்திக் கொண்டார்.

23. புனித யோவான் கிறிசோஸ்தோம் (4ஆம் நூற்றாண்டு): “கடவுள் தற்போது மண்ணத்திலும் மனிதர் விண்ணகத்திலும் இருக்கிறார்; அனைத்துப் பக்கத்திலும் எல்லா விடயங்களும்

ஒன்றிணைகின்றன. அவர் மனிதரானார். அவர் கடவுளாக ஆகவில்லை. அவர் கடவுளாக இருந்தார். அவர் மனித உடலேற்றார், அதனால் விண்ணகமே உள்ளடக்க முடியாதவரை, இந்நாளில் ஒரு தீவனத்தொட்டி பெற்றுக் கொண்டது.''

24. புனித ஜான் ஹென்றி நியூமன்: ''உடலேற்பானது கத்தோலிக்க விசுவாசத்தில் அதன் எல்லா நம்பிக்கைகளையும் ஒருங்கே கொணரும் மிகவும் தனிச்சிறப்பானப் புள்ளியாக இருக்க வேண்டும்.''